மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

06.10.2022 வியாழக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# சிங்கப்பூருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையை முறையாக நடைமுறைப்படுத்தினால் நாட்டுக்கு பாரிய நன்மை



## விசேட உரையில் ஜனாதிபதி தெரிவிப்பு

சிங்கப்பூருடன் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை கடந்த காலங்களில் உரிய முறையில் நடைமுறைப்படுத்த முடியவில்லை எனவும் அதனை முறையாக நடைமுறைப்படுத்த முடிந்தால் நாட்டுக்கு பாரிய நன்மைகள் ஏற்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் இன்று (வியாழக்கிழமை) விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இந்த உடன்படிக்கை தென்கிழக்காசியாவுடனான பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இலங்கையில் முதலீடுகளை விஸ்தரிப்பதற்கு ஜப்பான் ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு வங்கி என்பன ஆதரவை வழங்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். மேலும் கடன் மறுசீரமைப்புக்கு ஜப்பானுடன் ஒப்பந்தம் செய்திருப்பது நல்ல அறிகுறி என்று கூறிய ஜனாதிபதி, கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகளால் ஜப்பானுடனான

02

# GSP+ சலுகையை இடைநிறுத்துவதற்கான தீர்மானத்தை ஐரோப்பிய நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது

## விஜயதாச ராஜபக்ஷ

ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள **GSP+** சலுகையை இடைநிறுத்துவதற்கு ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அதற்கு 500க்கும் அதிகமான வாக்குகள் கிடைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ள அமைச்சர், எனினும் இந்த பிரேரணை இதுவரை அமுல்படுத்தப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். இந்த நிலையில், குறித்த பிரேரணையை நடைமுறைப்படுத்தினால் இலங்கையின் ஆடைத் தொழிலில் 6 தொடக்கம் 7 இலட்சத்திற்கும் அதிகமானோர் வேலையிழக்க நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், இலங்கை தொடர்பில் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை தொடர்பில் இன்று வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளதாகவும் முடிவுகள் ஆபத்தானதாக இருக்கலாம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



# 22வது அரசியலமைப்பு திருத்த சட்டமூலம் மீதான விவாதம் ஒத்திவைப்பு



அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலத்தை அடுத்த பாராளுமன்ற அமர்வின் போது விவாதத்திற்குஎடுத்துக்கொள்வதற்குஇன்று கூடிய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார். அதற்கமைய அடுத்த பாராளுமன்ற அமர்வு எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கூடும்.

# மினுவாங்கொடையில் துப்பாக்கிச்சூடு ஒரே குடும்பத்தைச்சேர்ந்த மூவர் பலி

மினுவாங்கொடையில் இன்று (வியாழக்கிழமை) காலை 7 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மூவர் உயிரிழந்துள்ளனர். **T56** ரக துப்பாக்கியால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் தந்தை மற்றும் இரண்டு மகன்களே சம்பவத்தில் உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். கார் மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த சிலர் துப்பாக்கிச் சூட்டை நடத்தியதுடன், துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இரு மகன்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான தந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கோப் குழுவின் புதிய தலைவராக ரஞ்சித் பண்டார நியமனம்



கோப் குழுவின் புதிய தலைவராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார நியமிக்கப்பட்டுள்ளார். பெரும்பான்மை வாக்குகளுடன் பொது நிறுவனங்கள் தொடர்பான குழுவின் **(COPE)** தலைவராக அவர் நியமிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்தப் பதவியை முன்னர் பேராசிரியர் சரித ஹேரத் வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எமது உயிருக்கு அச்சுறுத்தல்

## எம்.ஏ.சுமந்திரன்

பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் உட்பட என்னை பின்தொடர்ந்த கிழக்கு மாகாண பதிவிலக்கத்தை கொண்ட மோட்டார் சைக்கிளிலின் வந்தவர்களினால் எமது உயிருக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டு வந்தார். பாராளுமன்றத்தில் இன்று வியாழக்கிழமை சிறப்புரிமையை பிரச்சினைகளை முன்வைத்தே அவர் இதனை தெரிவித்துள்ளார். 2022 ஆகஸ்ட் 6 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் தொடர்பில் சிறப்புரிமை விடயத்தை எழுப்பியிருந்தேன். அது ஒழுக்க நெறி மற்றும் சிறப்புரிமை குழு தொடர்பானது. இதன்படி ஒக்டோபர் 4 ஆம் திகதி அது தொடர்பான கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி நான் அங்கு சென்றிருந்தேன். 'பெற்றி டீவி' அழைக்கப்பட்டு சான்று பகிரப்பட்டிருந்தாக முகநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் ஒரு அரசியல் கட்சியின் தலைவர் சிவனேசன்துரை சந்திரகாந்தன் குறித்த தவறான காட்சியை

02

# குழந்தைகள் பராமரிப்பு மையத்தில் துப்பாக்கிச்சூடு-34பேர்பலி

தாய்லாந்தின் வடகிழக்கு மாகாணத்தில் உள்ள குழந்தைகள் பராமரிப்பு மையத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 34 பேர் உயிரிழந்துள்ளனர். குழந்தைகள் பராமரிப்பு மையத்தில் இன்று நடந்த துப்பாக்கிச் சூட்டில் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் என 34 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குழந்தைகள் பராமரிப்பு மையத்தில் புகுந்த மர்ம நபர் அங்கிருந்த பிஞ்சு குழந்தைகள் மற்றும் ஆசிரியர்கள், ஊழியர்கள் உள்ளிட்டோர் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டுவிட்டு அங்கிருந்து தப்பிவிட்டார். அந்த நபர் முன்னாள் பொலிஸ் அதிகாரி என்பது விசரணையில் தெரிய வந்துள்ளது. இந்த கொடூர சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளியை உடனடியக கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து துறைகளையும் தாய்லாந்து பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

# மாணவர் விசாவுக்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையில் பத்து மடங்கு அதிகரிப்பு

கடந்த ஐந்து வருடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட மாணவர் விசா விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் பத்து மடங்கு அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கின்னன் தெரிவித்துள்ளார். இலங்கை விண்ணப்பதாரர்களுக்கு கனேடிய விசாக்கள் கிடைப்பதற்கு ஏற்படும் தாமதம் குறித்து வினவியபோதே கனேடிய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார். கொரோனா தொற்று, தொற்று நோய்க்கு பின்னர் ஏற்பட்ட தேவைகளின் அதிகரிப்பு மற்றும் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் ஆகிய காரணங்களே இந்த அதிகரிப்புக்கு காரணம் என கனேடிய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் இதுவரை காலமும் இல்லாத அளவில் கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் மாணவர் விசாவுக்கு விண்ணப்பித்தவர்களின்

02



## சிங்கப்பூருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையை

நட்புறவு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். சீனாவுடன் ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த காலத்தில் இருந்து சீனா எமது நாட்டுக்கு ஆதரவளித்து வருவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். இந்தியாவுடனான கலந்துரையாடலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இந்தியாவின் ஆதரவு எப்போதும் எமது நாட்டுக்கு வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் போன்ற கடன் வழங்கும் நாடுகளுடன் கூடிய விரைவில் ஒப்பந்தம் செய்துகொள்ள இலங்கை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

## எமது உயிருக்கு அச்சுறுத்தல்

அனுப்பியுள்ளார். அதில் அவரின் குரலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பந்தன் எவருக்கும் பிரயோசனமும் இல்லை. வெறுமனே ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றார் என்றும் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பான சான்றுகளின் பிரகாரம் சிவனேசதுரை சந்திரகாந்தன் என்பவரால் இது மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை ஒக்டோபர் 5 ஆம் திகதி சாணக்கியனும் நானும் நண்பகல் 12.45 மணியளவில் ஹோட்டன் பிளேசில் கூட்டமொன்றில் இரண்டு தனிப்பட்ட வாகனங்களில் சென்றோம். நாங்கள் பயணித்துக்கொண்டிருந்த போது பாதுகாப்பு தரப்பினர் எங்களை மோட்டார் சைக்கிளொன்று பின் தொடர்ந்து வந்தது என்று தெரிவித்து அதன் புகைப்படத்தை எடுத்துள்ளனர். கிழக்கு மாகாணத்தின் இலக்கத் தகடை கொண்ட வாகனமே வந்திருந்தது. புலனாய்வு உறுப்பினர் ஒருவர் எங்களை பின்தொடர்ந்ததாக கறுவாத்தோட்டம் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்திருந்தார். என்னுடையதும் இராசமாணிக்கம் சாணக்கியனின் சிறப்புரிமை விடயமே இது. நாங்கள் பாராளுமன்றம் வருவதும் செல்வதும் பாராளுமன்ற சிறப்புரிமைக்கு உட்பட்டதே. சிறப்புரிமை மற்றும் ஒழுக்கநெறி தொடர்பான நடவடிக்கையின் பின்னர் ஏன் எங்களை இப்படி புலனாய்வு உறுப்பினர்கள் பின்தொடர்கிறார்கள்.

புலனாய்வு உறுப்பினர்களுக்கு கிழக்கு மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. சபாநாயகர் இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இது எங்களின் உயிருக்கான அச்சுறுத்தல் என்பதுடன் எங்களின் சிறப்புரிமை மீறலுமாகும் என்றார்.

## மாணவர் விசாவுக்கு விண்ணப்பித்தவர்களின்

எண்ணிக்கை 10 மடங்கு அதிகரித்துள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார். அவசர தேவைக்காக மாணவர் விசாவுக்காக விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து வருவதாகவும் டேவிட் மெக்கின்னன் தெரிவித்துள்ளார். இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அரசாங்கத்துடன் தீவிரமான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

கனடாவுக்கு செல்லுவதற்கான விண்ணப்பிக்க விரும்புவோர் நேர காலத்துடன் விண்ணப்பிக்குமாறும் பயணத்திற்கான காரணம் குறித்து தெளிவாக கூறும்படியும் உயர்ஸ்தானிகர் அறிவுறுத்தி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



தியாக தீபம் திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு கொழும்பு மருதானையில் சமய சமூக நடுநிலையத்தால் அருட்பணி சக்திவேல் மற்றும் பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த அருட்பணி செராட் ஆகியோரின் தலைமையில் நினைவு கூறப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள். **(வாஸ் கூஞ்ஞ)**

## சம்மாந்துறையில் சர்வதேச சிறுவர் தின நிகழ்ச்சி




சம்மாந்துறை ப்ரில்லியன்ட் பாலர் பாடசாலையில் சர்வதேச சிறுவர் தினம் நிகழ்வுகள் இன்று முகாமைத்துவ பணிப்பாளர் எ.ஐ.சர்ஜீன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக சம்மாந்துறை உதவி பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம் அவர்களும், கௌரவ அதிதிகளாக இளம் விஞ்ஞானி சோமசுந்தரம் வினோஜ்குமார் அவர்களும், சமூக சேவை உத்தியோகத்தர் ஜனாப் சாபீர் அவர்களும், கருவாட்டுக்கல் –01 பிரிவின் கிராம சேவகர் ஐ.பாயிசா அவர்களும் கலந்து கொண்டதோடு மேலும் விசேட அதிதிகளாக எம்.எச்.ஸம்றினா அவர்களும், ஜே.எஸ்.றியானா அவர்களும், கே.எல்.றினோசா அவர்களும், எம்.ரீ.பௌசியா அவர்களும் மேலும் ஆசிரியர்களான ஏ.சிறாஜின்னிசா, எம்.எச்.ஹசீனா, எம்.எச்.பர்ஹானா ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

அங்கு கலந்து கொண்ட சோ.வினோஜ்குமார் உரையாற்றுகையில் "தற்காலத்தில் சிறுவர்களை வளர்ப்பதில் பிழையான தொழில்நுட்ப பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனையால் அதிக சிறுவர்கள் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இது தொடர்பான நல்ல விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பாலர் பாடசாலையில் இருந்தே சிறுவர்களுக்கு வழங்க வேண்டும். மேலும் பெற்றோர் ஒவ்வொரு நாளும் சிறுவர்களுடன் சுயாதீனமாக பேசி அவர்களது பிரச்சினைகளை இணங்கண்டு அதற்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்க வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் அவர்களை பல பிரச்சனைகளில் இருந்து பாதுகாத்து வளமான எதிர்காலத்தை உருவாக்க முடியும்." மேலும் மாணவர்களுக்கு வீட்டுத்தோட்டம் செய்வதற்கான பயிர்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# கந்தளாயில் முதியோர்களை கௌரவிக்கும் நிகழ்வு

**எப்.முபாரக்**

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் முதியோர் தினத்தினை முன்னிட்டு கந்தளாய் கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் ஏழுபது வயதுக்கு மேற்பட்ட முதியோர்களை பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். இந்நிகழ்வு கந்தளாய் கலை இலக்கிய பேரவையின் தலைவர் முஸ்தபா சகாப்தீன் அவர்களின் தலைமையில் எதிர்வரும் 2022 ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி சனிக்கிழமை கந்தளாய் பேராற்றுவெளி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. இதன் போது கந்தளாய் பிரதேசத்திலுள்ள பல்வேறு திறைமைகளை உடைய எழுபது வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். இந்நிகழ்வுக்கு கந்தளாய் பிரதேச செயலகத்தின் கலாச்சார உத்தியோகத்தர் நிமால் ஸ்ரீ பண்டார பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# அரசினர் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெற்ற ஆசிரியர் தின நிகழ்ச்சி





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

சர்வதேச ஆசிரியர் தினத்தினை முன்னிட்டு அரசினர் ஆசிரியர் கலாசாலையின் ஆசிரியர் தின நிகழ்வு அதிபர் சி.மொரீன் தலைமையில் இன்று (6) திகதி கலாசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. ஆசிரியர்களின் உன்னத சேவையினை போற்றும் முகமாக சர்வதேச ரீதியில் ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதம் 06 திகதி ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. ஆசிரியப் பணியை புனிதப் பணியாக கருதி பணியாற்றிவரும் ஆசிரியர்களை கௌரவிக்கும் வகையிலேயே குறித்த ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. குறித்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் ஓய்வுநிலை பேராசிரியர் எம் .செல்வராஜா கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்ததுடன், விசேட அதிதியாக ஓய்வு பெற்ற வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி.எஸ். சக்கரவர்த்தி, மற்றும் விரிவுரையாளர்கள் ஆசிரியர்கள், ஆசிரிய பயிலுனர்கள் என பலரும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.

# பெண்கள் சிறுவர் வன்முறைகளை தடுக்க விழிப்புணர்வு பதாதைகள் வழங்கி வைத்தலும் கலந்துரையாடலும்




**ஹஸ்பர்**

பெண்கள் வன்முறைகள் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கான பெண்கள் குழுவுடனான கலந்துரையாடல் தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இன்று (06)இடம் பெற்றது. குறித்த கலந்துரையாடலானது தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம் பெற்றதுடன் இதனை அகம் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. பெண்கள் சிறுவர்களுக்கான வன்முறைகளை தடுக்கவும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் விழிப்புணர்வு பதாகைகளும் இதன் போது கையளிக்கப்பட்டன. இப் பதாகையினை மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் காட்சிப்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதில் அகம் நிறுவன இணைப்பாளர் பொ.சச்சிவானந்தம், ஓய்வு நிலை முன்னால் அதிபர் எம்.எம்.முஸ்தபா,பெண்கள் அபிவிருத்தி மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள்,சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்,பெண் குழுவினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# பட்டங்களை முடித்திருந்தும் ஆங்கிலத்தில் புலமையில்லை என்றால் இன்றைய காலகட்டத்தில் அது பிரயோசனமற்றதாகிவிடும்

### கலாநிதி சிராஸ் மிராசாஹிப்

**நூருல் /ஹுதா உமர்**

தலைநகர் போன்ற பிரதேசங்களில் உள்ளவர்களை போன்று கிழக்கு பிரதேச இளைஞர்கள் ஆங்கிலத்தை நன்றாக கற்றுக்கொள்வதன் மூலமும், திறமைகளை சரியான வகையில் விருத்தி செய்து கொள்வதன் மூலமும் எதிர்கால சவால்களை ஒழுங்காக சந்திக்க முடியும். பட்டங்களை முடித்திருந்தும் ஆங்கிலத்தில் புலமையில்லை என்றால் இன்றை காலகட்டத்தில் அது பிரயோசனமற்று போகிவிடும் என கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வரும், மெட்ரோ பொலிட்டன் கல்லூரி தவிசாளருமான கலாநிதி சிராஸ் மிராசாஹிப் தெரிவித்தார். கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலய பாடசாலை முகாமைத்துவ குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சர்வதேச ஆசிரியர் தின விழா இன்று (06) பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். சம்சுதீன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர், ஆங்கில கல்வியை சிறப்பாக நேரிய முறையில் கற்பதனூடாக தொழில் வாய்ப்புக்களை பெறுவது மட்டுமின்றி சிறந்த எதிர்காலத்தையும் உருவாக்க முடியும். ஆசிரியர்கள் அப்படியான கல்விசூழ்நிலையை மாணவர்களுக்கு உருவாக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது. அண்மையில் எனது கல்லூரிக்கு ஆட்சேர்ப்பு செய்ய நான் நேர்முகத்தேர்வொன்றை நடத்தியபோது கிழக்கு பிராந்திய




பட்டதாரிகளின் ஆங்கில புலமையை அறிந்து கொண்டேன். சர்வதேச தொழிற்சந்தைக்கும், இலங்கையின் உள்ளக மேம்பாட்டுக்கும் ஒழுக்கமும், கல்வியறிவும், ஆங்கில புலமையும் அவசியம் என்றார். இந்நிகழ்வுக்கு கௌரவ அதிதியாக கல்முனை கல்வி மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ.எம். ஸாஹிர், வீதி அபிவிருத்தி திணைக்கள நிறைவேற்று பொறியியலாளர் எம். எம்.எம். முனாஸ், சாய்ந்தமருது கோட்டக்கல்வி பணிப்பாளர் எம்.என். அப்துல் மலீக், ஆசிரிய ஆலோசகர் ஏ.சஹுரூன், கிராம நிலதாரி ஏ.எல்.நாஸர், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று சங்க உறுப்பினர்கள், பாடசாலை பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மெட்ரோ பொலிட்டன் கல்லூரி உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.



# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி
இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25039 | ப + க | 1985**
மானிப்பாய் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 01

**21792 | வே | 1993**
மானிப்பாய் | இந்து | Diploma
Medical Executive
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

**21957 | வே | 1991**
வேலணை | இந்து | BSc
Quantity Surveyor
திருவாதிரை (மிதுனம்)
170 செ.மீ | செவ்: 12

**21903 | வே | 1993**
மூளாய் | இந்து | BSc
IT Trainee
பூசம் (கடகம்)
170 செ.மீ

**24619 | வே | 1990**
யாழ்ப்பாணம் | கத்தோலிக்கம்
BD | Team Leader
சுவாதி (துலாம்)
170 செ.மீ

**21855 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | A/L
Associate Manager
பூரட்டாதி (கும்பம்)
175 செ.மீ

**25069 | வே | 1986**
பருத்தித்துறை | இந்து | BA
CIMA | Accountant
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 08

**21795 | வே+கோ | 1995**
கோப்பாய் | இந்து | A/L
Cashier | ஜேர்மனி
பூரம் (சிம்மம்)
167 செ.மீ | செவ்: 12

**24955 | சா | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Own Business
சித்திரை (துலாம்)
187 செ.மீ

**23851 | வே | 1976**
அச்சுவேலி | இந்து | A/L
Own Business
சுவாதி (துலாம்) | Canada
172 செ.மீ | சூ.செவ்: 04

**22549 | வே | 1988**
காரைநகர் | இந்து | B.Eng
Mechanical Engineer
கார்த்திகை (ரிஷபம்)
165 செ.மீ

**25048 | வே | 1991**
கோப்பாய் | இந்து | Master
Degree | Banker
சித்திரை (கன்னி)
177 செ.மீ | சூ.செவ்: 06

**22230 | வே | 1988**
கொக்குவில் | இந்து
Diploma | Receptionist
சுவாதி (துலாம்) | France
167 செ.மீ | செவ்: 02

**22224 | வே | 1988**
திருநெல்வேலி | இந்து | BSc
Exe.Mechanical Engineer
கேட்டை (விருச்சிகம்)
170 செ.மீ | Singapore

**21912 | வே | 1990**
கொக்குவில் | இந்து | MSc
Software Engineer
திருவோணம் (மகரம்) | ஜேர்மனி
180 செ.மீ | Divorced

**22179 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | HNDM
Reagional Manager
உத்தராடம் (தனுசு)
192 செ.மீ | செவ்: 04

**21996 | வே | 1990**
நெல்லியடி | கத்தோலிக்கம்
BSc | Engineer
187 செ.மீ

**22068 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | BSc
Software Engineer
மகம் (சிம்மம்)
180 செ.மீ | செவ்: 04

**21891 | வே | 1992**
காரைநகர் | இந்து | BSc
Software Engineer
பூரட்டாதி (மீனம்) | USA
186 செ.மீ | செவ்: 07

**22146 | வே | 1993**
வேலணை | இந்து
BSc | Lecturer
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | செவ்: 04

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**22264 | கோ | 1987**
கரவெட்டி | இந்து | Msc
Civil Engineer
பூரட்டாதி (கும்பம்)
160 செ.மீ

**21711 | வே | 1990**
நல்லூர் | இந்து
MBBS | Doctor
சதயம் (கும்பம்)
162 செ.மீ

**21645 | கோ | 1996**
புளியங்கூடல் | இந்து | A/L
Pharmacy Assistant
உத்தரம் (சிம்மம்)
165 செ.மீ

**22261 | வே | 1996**
ஈச்சமோட்டை | RC | Diploma
Accounts Assistant
சுவாதி (துலாம்)
157 செ.மீ | செவ்: 12

**22164 | வே | 1998**
காரைநகர் | இந்து | A/L
Student (BSc)
திருவாதிரை (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**22258 | கு | 1987**
முல்லைத்தீவு | இந்து | MBBS
MD | Doctor
மகம் (சிம்மம்)
164 செ.மீ

**22167 | சா | 1991**
பண்டத்தரிப்பு | இந்து | BA
Development Officer
பூரம் (சிம்மம்)
165 செ.மீ | சூ.செவ்: 09

**21882 | வே | 1992**
மீசாலை | இந்து | BD
Regulatory Affairs
Specialist | மகம் (சிம்மம்)
160 செ.மீ | France | செவ்: 02

**21831 | வே | 1995**
திருநெல்வேலி | இந்து
A/L | Junior Executive
கேட்டை (விருச்சிகம்)
146 செ.மீ | செவ்: 01

**22053 | தே | 1992**
மாத்தளை | இந்து
BD | PGD | Doctor
உத்தரம் (கன்னி)
157 செ.மீ | செவ்: 08

**21966 | கு | 1988**
காங்கேசன்துறை | இந்து
MBBS | Doctor
சுவாதி (துலாம்)
152 செ.மீ | செவ்: 02

**21675 | கு | 1992**
பருத்தித்துறை | கத்தோலிக்கம்
A/L | Teacher
மிருகசீரிடம் (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**21738 | கோ | 1992**
கரவெட்டி | இந்து | PD
Lab Incharge | UK
உத்தராடம் (மகரம்)
172 செ.மீ | செவ்: 12

**25075 | வா.செ | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Diploma | Teacher
மகம் (சிம்மம்)
174 செ.மீ

**22101 | கோ | 1995**
மூளாய் | இந்து | MBBS
Lecture & Consultant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 12

**22657 | வே | 1991**
கொக்குவில் | இந்து
Student (Music course)
ரேவதி (மீனம்)
162 செ.மீ

**25036 | அ | 1993**
கொழும்பு | இந்து | Diploma
Senior Business Analyst
அத்தம் (கன்னி)
162 செ.மீ

**25006 | இ.வே | 1993**
அளவெட்டி | இந்து
BSc | Nurse | UK
உத்தரட்டாதி (மீனம்)
158 செ.மீ

**22206 | கோ | 1993**
அச்சுவேலி | இந்து
A/L | Job Seeker
சதயம் (கும்பம்)
157 செ.மீ | செவ்: 01

**21930 | கோ | 1999**
அல்லை | இந்து
ACCA | Executive
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 12

## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# குடும்பிமலையில் மகா யாக உற்சவம்



**ந.குகதர்சன்**

வரலாற்று தொன்மைவாய்ந்த குடும்பிமலை ஸ்ரீ குமரன் ஆலயத்தின் உற்சவகால பாதயாத்திரையும் வருடாந்த அலங்கார உற்சவம் செந்தமிழ் மந்திரம் ஒலிக்க குடும்பிமலையில் மகா யாக உற்சவப் பெருவிழா இன்றைய தினம் நிறைவடைந்தது. வருடாந்தாம் குமரன் ஆலயத்திற்கான பாதயாத்திரை மரபுவழியாக முருகப்பெருமானின் ஆதியிருப்பிடமான வரலாற்று புகழ்பெற்ற சித்தாண்டி சித்திர வேலாயுத கோவிலில் இடம்பெறும் விசேட பூசையுடன் ஆரம்பமாகும், இவ்வேளை நேற்றைய தினம் ஆரம்பமான பாதயாத்திரைக்கு பல நூற்றுக்கணக்கான அடியார்களுடன் பாரம்பரியமாக ஆலயத்திலிருந்து ஆதிவேல் மற்றும் தேன் மற்றும் திணைமா கோவில் சித்தாண்டி முருகன் கோவில் வன்னிமை தலைமையில் வழங்கிவைக்கப்பட்டதும் பாதயாத்திரை ஆரம்பமானது.

உற்சவகால பாதயாத்திரை சித்தாண்டி முச்சந்தி விநாயகரை வழிபட்டதும் சந்திவெளி மற்றும் கிரான் பிள்ளையார் ஆலயம் உள்ளிட்ட ஆலயங்களை சென்றடைந்து நண்பகல் கோராவெளி கண்ணகி அம்மன் ஆலயத்தை வந்தடைந்தது, பாதயாத்திரையில் ஈடுபட்ட அடியார்களுக்கு பலர் முன்வந்து தாகசாந்தி மற்றும் நண்பகல் அன்னதானம் என்பன வழங்கப்பட்டது. பாதயாத்திரியர்கள் முதல் நாள் பள்ளத்துச்சேனை மகா விஸ்ணு ஆலயத்தை சென்றடைந்ததுடன் அன்றிரவு ஆலயத்தில் விசேட பூசை மற்றும் பஜனை என்பன இடம்பெற்றது. ஆலய உற்சவகால இரண்டாம் நாளுக்குரிய பாதயாத்திரை பள்ளத்துச்சேனையிலிருந்து காலை ஆரம்பமாகி குடும்பிமலை குமரன் ஆலயத்தை வந்தடைந்ததும் மலையடி விநாயகர் பூசை இடம்பெற்றதுடன் ஆடியார்கள் கண்ணகி அம்மனை வழிபட்டு ஆதிவேலுடன் அரோகரா கோசத்துடன் நூற்றுக்கணக்கான அடியார்கள் மலையேறினர். குடும்பிமலை குமரன் சந்நிதியை சென்றடைந்ததும் ஆடியார்களினால் பக்தியமானது குமரன் மலையுச்சி. ஆதிவேல் கொண்டுவரப்பட்டுவிசேட பூசைகளுடன் பக்தி பஜனை பாடல்கள் இடம்பெற்றது. மட்டக்களப்பு ஆதீனத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட சிவ தொண்டர் திருக்கூடமும் இணைந்து செந்தமிழ் ஆகமத்தில் நடைபெறும் யாக பூசையினை நடாத்தினர்.

அதன்பின்னர் ஆதிவேலுக்கு கும்பாவிசேகம் இடம்பெற்றதும் அலங்கார விசேட பூசை நடைபெற்றது. அதன்பின்னர் செந்மிழ் ஆகமத்தில் அதிகாலை பூசை இடம்பெற்றதுடன் இவ்வருடத்திற்கான லங்கார உற்சவம் இனிதே நிறைவடைந்தது. பாதயாத்திரிகளின் பாதுகாப்பு கருதி கிரான் வனஜீவராசிகள் பகுதி உத்தியோகத்தர்கள் பாதுகாப்பு வழங்கியதுடன் கிரான் பிரதேச செயலக பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாவு தலைமையில் அன்னதான பணி இடம்பெற்றதுடன் இரவு யாக விசேட பூசைளிலும் பிரதேச செயலாளர் கலந்துகொண்டிருந்தார்.

# பன்குடாவெளி றோ.க.த.க பாடசாலையின் ஆசிரியர் தின நிகழ்ச்சி





**(செங்கலடி நிருபர் சுபா)**

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பன்குடாவெளி றோ.க.த.க பாடசாலையின் ஆசிரியர் தின நிகழ்ச்சிகள் பாடசாலையின் அதிபர் , பாசாலையின் அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்களின் ஏற்பாட்டிலும் மாணவர்களின் ஒழுங்கமைப்பிலும் அதிபர் ஆர். செந்தில்நாதன் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இன்று வியாழன்(06)இடம்பெற்றது. ஆரம்ப நிகழ்வாக மாணவர் மற்றும் பெற்றோர்களினால் அதிதிகளையும் ,ஆசிரியர்களையும் வரவேற்கும் நிகழ்வு இடம்பெற்றது .

அதனை தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் ஆசிரியர் கீதம் இசைக்கப்பட்டு ஆசிரியர் தினத்தை சிறப்பிக்கும் வகையில் கலை நிகழ்வுகளும் , ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு மற்றும் பரிசில்கள் வழங்கள் நிகழ்வுகளும் இடம்பெற்றது .

சமூகத்திற்கும் நாட்டுக்கும் நற்பிரஜைகளை உருவாக்குவதில் வழிகாட்டியாக இருக்கின்ற ஆசிரியர்களை கௌரவிக்கும் வகையில் பாடசாலையின் மாணவர்கள் மற்றும் பெற்றோர் பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச சபையின் தவிசாளர் சி.சர்வானந்தன், பன்குடாவெளி றோ.க.த.க பாடசாலையின் ஆசிரியர்கள், மட்டக்களப்பு மண்முனை மேற்கு கல்வி வலயத்தின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் ஏ.ஜெயக்குமணன், இணைப்பாளர் எஸ்.பரமானந்தம் பாடசலையின் அதிபர் ஆர்.செந்தில்நாதன் , ஆசிரியர்கள் ,மாணவர்கள் மற்றும் பாடசாலையின் அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் , பழைய மாணவர்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

# குடும்ப சூழலே சிறுவர்கள் போதைக்கு அடிமையாக காரணம்

**( வாஸ் கூஞ்ஞ)**

பிள்ளைகள் இறைவனால் எமக்கு தரப்பட்ட பெரும் சொத்துக்கள் குடும்ப மற்றும் சமூக சூழலிருந்தே இவர்கள் பாடசாலை வருகின்றமையால் பெற்ரோரே இன்றைய சூழலில் உங்கள் பிள்ளைகளை நீங்கள் மிகவும் பாதுகாப்பான முறையில் வளர்க்க வேண்டும் என வங்காலை புனித ஆனாள் ஆரம்ப பாடசாலையின் முதல்வர் அருட்சகோதரி மேரி றொசாந்தி இவ்வாறு மேலும் தெரிவித்தார். வியாழக்கிழமை (06.10.2022) மன். வங்காலை புனித ஆனாள் ஆரம்ப பாசாலையில் நடந்த நிகழ்வில் முதல்வர் அருட்சகோதரி மேரி றொசாந்தி மேலும் தெரிவிக்கையில்

வங்காலை புனித ஆனாள் ஆரம்ப பாடசாலையானது சிறுவர் , முதியோர் , அத்துடன் இன்றைய சிறப்பு நாளான (06.10.2022) ஆசிரியர் தினத்தையும் சிறப்பாக கொண்டாடுகின்றது. சிறுவர்களை நோக்கும்போது இவர்கள் எமது சொத்துக்கள். இறைவனால் எமக்கு வழங்கப்பட்ட செல்வங்கள். இவர்கள் தங்கள் குடும்பத்தில் , சமூகத்தில் , சூழலில் பெற்றுக் கொண்ட அனுபவங்களுடன்தான் பாடசாலை வருகின்றனர்.

இவர்களைத்தான் ஆசிரியர்கள் சிற்பம் செதுக்குவதுபோல் செதுக்கி ஒரு நல்ல பிரஜைகளாக உருவாக்குகின்றார்கள். இவர்கள் மட்டில் ஆசிரியர்கள் மிகவும் கவனம் செலுத்தி அவர்களின் உருவாக்கத்தில் பங்களிப்பு செய்து வருகின்றனர். ஒரு வைத்தியரோ அல்லது வேறு எந்த நிலையிலிருப்பவரோ அவர்களின் நிலைக்கு உருவாக்க முடியாது. ஆனால் ஒரு ஆசிரியர்தான் ஒரு ஆசிரியரையோ வைத்தியரையோ பொறியியலாரையோ எவரையும் உருவாக்க முடியும் என்பது நாம் அறிவோம்.இப்படிப்பட்டவர்களான ஆசிரியர்களுக்கு நாம் இன்று விழா எடுக்கின்றோம். பிள்ளைகள் தொடர்பாக ஆசிரியர்களுக்கு கூறுவது ஓவ்வொரு ஆசிரியரும் தங்களிடம் கையளிக்கப்பட்ட பிள்ளைகளின் பின்னனியில் பல விடயங்கள் மறைந்து காணப்படும் இதை ஒவ்வொரு ஆசிரியரும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

நாம் மாணவர்களை நல்வழிக்கு அழைத்துச் செல்லும்போது அவர்கள் ஒரு காலத்தில் பல உயர்ந்த இடத்தில் இருப்பர். அத்துடன் இந்த சமூகத்தில் நல்ல ஒழுக்கமுள்ள பிரஜையாகவும் இருப்பர். பெற்ரோரே இன்றைய சூழலில் உங்கள் பிள்ளைகளை நீங்கள் மிகவும் பாதுகாப்பான முறையில் வளர்க்க வேண்டும். குடும்பத்தில் போதை வஸ்து பாவிப்பதை பார்த்து சிறுவர்களும் அந்த நிலைக்கு தற்பொழுது வரும் நிலை உருவாகி விட்டது.ஆகவே பெற்றோரே உங்கள் வீட்டுச் சூழலை நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல நிலைக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ள வேண்டும்.கல்வியும் ஒழுக்கமும் எமது மாணவர்களின் இரு கண்களாக இருக்க வேண்டும். ஆகவே உங்கள் பேச்சு நடவடிக்கை பிள்ளைகளின் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தாத நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும் என இவ்வாறு கேட்டுக் கொண்டார்.



நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES

# இயந்திரத்துடன் படகு மீட்பு பொலிஸார் விசாரணை முன்னெடுப்பு



**பாறுக் ஷிஹான்**

இயந்திரத்துடன் இணைந்த படகு ஒன்று புதன்கிழமை(5)மாலை மீட்கப்பட்டு சாய்ந்தமருது கடற்கரைப்பகுதி கரைக்கு இழுத்து வரப்பட்டுள்ளது. குறித்த படகானது பாலமுனை கடற் பகுதியில் அநாதரவாக காணப்பட்டதை அடுத்து படகு குறித்து கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய சாய்ந்தமருது பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். குறித்த கடல் பகுதியில் தொழில் செய்துவரும் மீனவர் ஒருவர் குறித்த படகு கைவிடப்பட்டுள்ளதை இனம் காண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து குறித்த பகுதிக்கு சென்ற பொலிஸார் படகு குறித்து விசாரணையினை மேற்கொண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்கள்.

சாய்ந்தமருது பொலிஸ் குழுவினர் கரையொதுங்கிய படகு குறித்து விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் குறித்த படகில் மீனவர்களோ எந்தவித கடற்சாதனங்களோ இருக்கவில்லை என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதே வேளை கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட கடற்பரப்பில் இருந்து கடந்த 26.09.2022 அன்று மாலை புறப்பட்டு சென்ற 4 மீனவர்கள் 10 நாட்கள் ஆகியும் அவர்கள் குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அரச அதிபர் கலந்து கொண்ட அறநெறி வாணிவிழா





**(வி.ரி.சகாதேவராஜா)**

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் கலந்து கொண்ட அறநெறி வாணி விழா நேற்று நடைபெற்றது. இராமகிருஷ்ண மிஷனின் அறநெறிபாடசாலை வாணிவிழா கல்லடி சுவாமி விபுலானந்த மணிமண்டபத்தில் நடைபெற்றது. இராமகிருஷ்ண மிஷன் கல்லடி குருகுல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ் தலைமையில் விழா நடைபெற்றது. பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் சிவானந்தா பழைய மாணவருமான க.கருணாகரன் கலந்து சிறப்பித்தார். உதவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் கலந்து கொண்டார். இலங்கையில் இராமகிருஷ்ண மிஷன் எனும் காணொளிக்காட்சி இடம்பெற்றது. அறநெறிப் பாடசாலை அதிபர் க.மதிவண்ணன் நன்றி உரையாற்றினார்.

# மயிலம்பாவெளி உதவும் கரங்கள் இல்லத்தில் "தாலாட்டு" சிறுவர் தின விசேட நிகழ்ச்சி





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

"வழி தேடும் சிறுவர்களின் ஒளியாக பிளிர்வோம்" எனும் கருப்பொருளில் தன்னாமுனை மயிலம்பாவெளி உதவும் கரங்கள் இல்லத்தினால் முன்னெடுத்து வரும் செயல்திட்டத்தின் 2022 ஆண்டில் சர்வதேச சிறுவர் தினத்தை சிறப்பிக்கும் வகையில் "தாலாட்டு" சிறுவர் தின விசேட நிகழ்வு உதவும் கரங்கள் இல்லத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றுள்ளது.

உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் எஸ்.ஜெயராஜ் தலைமையில் உதவும் கரங்கள் அமைப்பின் இல்லத்தில் நடைபெற்ற சர்வதேச சிறுவர்தின நிகழ்வில் சிறுவர்களின் கலைகலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் சிறுவர்களுக்கான சிறுவர் தின பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் பிரதம அதிதியாக திறந்த பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கே.ஞானரெத்தினம், சிறப்பு அதிதியாகவும், மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் வி.பேரின்பராஜா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கே.குணநாயகம், உதவும் கரங்கள் அமைப்பின் செயலாளர் எ.முகுந்தன் ஆகியோர் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்துள்ளனர். கனடிய சி.ஆர்.இ.பி அமைப்பின் நிதி உதவியில் கிழக்கு சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் உதவும் கரங்கள் அமைப்பினால் " வழி தேடும் சிறுவர்களின் ஒளியாக பிளிர்வோம் " எனும் கருப்பொருளில் முன்னெடுத்து வரும் செயல்திட்டத்தின் கீழ் கிழக்குமாகாணத்தில் வறுமை கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரம், சுகாதாரம், மாணவர்களின் கல்வி மேம்பாடு போன்ற அடிப்படை தேவைகளை அபிவிருத்தி செய்யும் பல செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தம்பலகாமம் பிரதேச செயலக பிராந்திய கணக்காய்வு குழு கூட்டம்



**ஹஸ்பர் ஏ**

தம்பலகாமம் பிரதேச செயலக பிராந்திய கணக்காய்வு குழு கூட்டம் நேற்று (05) காலை 9.30 மணியளவில் பிரதேச செயலாளர் ஜெ. ஸ்ரீபதி தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன் போது வெளிக்கள உத்தியோகத்தர்களின் களப் பணி நடவடிக்கைகள் உட்பட அலுவலக விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. இதில் திருகோணமலை மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஏ.எல். மஹ்ரூப்,திருகோணமலை பிராந்திய கணக்காய்வாளர் திணைக்களத்தின் பிரதி கணக்காய்வாளர்,உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன்,நிருவாக உத்தியோகத்தர் உடகெதர மற்றும் அலுவலக ஊழியர்கள் உட்பட வெளிக்கள உத்தியோகத்தர்கள் கிளை தலைவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# நுவரெலியாவில் உற்பத்தியாகும் பொருட்களை புகையிரதத்தில் கொண்டு செல்லும் வேலைத்திட்டம்



**தலவாக்கலை பி.கேதீஸ்**

நுவரெலியா பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகள், பழங்கள் மற்றும் பூக்களை நானுஓயா புகையிரத நிலையத்திலிருந்து கொழும்புக்கு புகையிரதத்தில் கொண்டு செல்லும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட மற்றும் நுவரெலியா மேயர் சந்தன லால் கருணாரத்ன தலைமையில் இடம்பெற்றது. கௌரவ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் பதுளை ஆலிஹெலயிலிருந்து கொழும்புக்கு மரக்கறிகள் மற்றும் பழங்களை ரயிலில் கொண்டு செல்வது தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டது. அதற்கிணங்க இடம்பெற்ற

இந்த கலந்துரையாடலில் நுவரெலியா மேலதிக மாவட்ட செயலாளர் சுஜீவ போதிமான்ன, நுவரெலியா பிரதேச செயலாளர் விதுர சம்பத், அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்களின் சங்கத்தின் தலைவர் அருண ஹெட்டியாராச்சி, நானுஓயா புகையிரத நிலைய அதிபர், நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தகர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# மக்கள் வங்கியின் ஆலையடிவேம்பு சேவை நிலையத்தில் வாணி விழா



**வி.சுகிர்தகுமார்**

மக்கள் வங்கியின் ஆலையடிவேம்பு சேவை நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட வாணி விழா நிகழ்வு 05.10.2022 அன்று காலை சுப வேளையில் சிறப்பாக இடம்பெற்றது. முகாமையாளர் விஜிதா பிரேம் ஆனந்த் தலைமையில் அக்கரைப்பற்று மருதடி மாணிக்க பிள்ளையார் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ கஜமுக சர்மாவினால் முன்னெடுக்கப்பட்ட குறித்த வாணி விழா நிகழ்வின் அதிதிகளாக மக்கள் வங்கியின் அம்பாறை பிராந்திய முகாமையாளர் எச்.டி.குணரத்ன, உதவி பிராந்திய முகாமையாளர் எஸ். சூரியகுமாரன், சட்ட வல்லுநர் ஆர். கோகுலவாணி, அக்கரைப்பற்று கிளை முகாமையாளர் எம்.பி.எம்.அன்வர், அட்டாளைச்சேனை கிளை முகாமையாளர் எம்.ஐ.எஹியா ஆகியோர் கலந்து கொண்டிருந்ததுடன், மக்கள் வங்கியின் அம்பாறை பிராந்தியத்துக்குட்பட்ட கிளைகளின் உத்தியோகத்தர்களும் வாடிக்கையாளர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# லொறி குடைசாய்ந்து விபத்து

**தலவாக்கலை பி.கேதீஸ்**



திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விஜயபாகுகந்த, மெதகமமெத்த பகுதியில் நேற்று (5) லொறியொன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளதாக திம்புள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர். ஹட்டன் லங்காம டிப்போவில் நடத்துனராகப் பணிபுரியும் இராவணாகொட பிரதேசத்தைச் சேர்ந்த பி. ஜகத் ஜெயானந்த பண்டார (வயது 48) இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார். ஹட்டனிலிருந்து மெதகமத்த பிரதேசத்தில் வீடொன்றின் நிர்மாணப் பணிகளுக்காக குறித்த லொறியில் மணல் மற்றும் கூரை ஓடுகளை ஏற்றிச் சென்ற போது லொறி வீதியில் கட்டுப்பாட்டை இழந்து பின்நோக்கி சென்று வீதியின் குறுக்கே குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் சாரதி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்த நடத்துனர் தனது பணியை முடித்துக்கொண்டு வீடு திரும்புவதற்காக லொறியின் பின் பகுதியில் பயணித்துள்ளார். துர் அதிஸ்டவசமாக லொறியின் மேற்கூரை கம்பிகள் உடல் மீது விழுந்ததில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலத்தை சட்ட வைத்திய பரிசோதனைக்காக நாவலப்பிட்டிய பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். விபத்தில் லொறியின் சாரதி மற்றும் சாரதி உதவியாளரும் காயமடைந்துள்ளதுடன், அவர்கள் சிகிச்சைக்காக மல்தெனிய பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு

களஞ்சியத்தின்
விஸ்தீரணம்
1512 சதுர அடி.
நீளம் 42 அடி.
அகலம் 35
அடி, உயரம் 18 அடி.
அலுவலக அறை
170 சதுர அடி.
குளியல் அறை.
மலசலகூடங்கள் 02,
நீர் வசதி, மின்சார வசதி ,
போக்குவரத்து வசதி
(பிரதான வீதியில்
அமைந்துள்ளது)



அமைவிடம்:
திருகோணமலை வீதி.
ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு.

தொடர்புகளுக்கு: whatsapp: 0041 76 345 23 95

# மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இறுதிநாள் வாணி விழாவும், ஏடு தொடங்கி வைப்பு நிகழ்வும்



**பைஷல் இஸ்மாயில்**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நவராத்திரி விழாவின் இறுதிநாள் விழாவும், ஏடு தொடங்கி வைக்கும் நிகழ்வும் நேற்று (05) மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் இடம்பெற்றது. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் ச.நேசராஜா கலந்துகொண்டு சிறப்பித்தார். திருகோணமலை ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ சாந்தமூர்த்தி குருக்களினால் இறுநாள் நவராத்திரியின் விஷேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதையடுத்து, மாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் ச.நேசராஜா மற்றும் மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் ஆகியோரினால் ஏடு தொடங்கி வைக்கப்பட்டு, அச்சிறுவர்களுக்கான கற்றல் உபகரணங்களையும் வழங்கி வைத்தனர்.

இந்நிகழச்சியின் போது, இரட்ணம் சஞ்சு சியாமலி சகோதரிகளின் வீணை இசையும், திருகோணமலை ஆனந்த பிரகதீஸ்வரா கலாலய மாணவர்களின் நடனமும் நிகழ்ச்சியும் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது. இதில் திணைக்களத்தின் காலாச்சார உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# தங்கம் வென்று சரித்திரம் படைத்தது நிந்தவூர் அல் -அஷ்றக் தேசிய பாடசாலை

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

மாகாண மட்ட தமிழ் தினப்போட்டியின் முஸ்லிம் நிகழ்ச்சியில் வரலாற்றில் முதல் முறையாக நிந்தவூர் அல்–அஷ்றக் தேசிய பாடசாலை தங்கப்பதக்கம் வென்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. அத்தோடு, இப்பாடசாலை 2014 ஆம் ஆண்டின் பின் சிறுகதை ஆக்கப் போட்டியிலும் மாகாணத்தில் தங்கப்பதக்கம் வென்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் வரலாற்றில் முதல்முறையாக மாகாண மட்ட தமிழறிவு வினா – விடைப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை வென்று சாதனை நிலைநாட்டியுள்ளது.

இவ்வாறு சரித்திர சாதனைகளைப் படைக்க, இவர்களை பயிற்றுவிப்பதில் இரவு பகல் பாராது அயராது உழைத்த, ஆசிரியர் வை.எம்.அஷ்ரப் மற்றும் பல்கலைக்கழக மாணவர் முஸ்பீர் அஹ்மட் மற்றும் தமிழ் பாட ஆசிரியர்கள், வெற்றிக்குக் காரணமாக இருந்த மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள், விஷேட பயிற்சிகள் வழங்கிய ஆசிரியர்கள் குழு, பாடசாலை முகாமைத்துவ குழு உறுப்பினர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் நிந்தவூர் கோட்டக் கல்வி அதிகாரி, சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர் (தமிழ் ) மற்றும் பாடசாலை ளுனுநுஊ உறுப்பினர்கள் அனைவருக்கும் பாடசாலையின் அதிபர் ஏ.அப்துல் கபூர் நன்றிகளையும் வெற்றி பெற்ற மாணவர்களைப் பாராட்டி, தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

# உலக மல்யுத்த சாம்பியன்ஷிப்பில் பங்கேற்கும் நேத்மி உள்ளிட்ட அணிக்கு சஜித் பிரேமதாஸவிடமிருந்து நிதி உதவி




2022 பொதுநலவாய மல்யுத்தப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்று தாய்நாட்டுக்குப் புகழைக் கொண்டு வந்த நெத்மி அஹிம்சா பெர்னாண்டோ வீராங்கனைக்கும்,அவருடன் இவ்வருட உலக மல்யுத்த சம்பியன்ஷிப் போட்டியில் பங்குபற்றவுள்ள வீராங்கனை சாமோத்ய கேஷ ானி மற்றும் அவர்களின் பயிற்றுவிப்பாளர் திரு.டி.சுரங்க குமார ஆகியோருக்கு தலா 5 இலட்சம் ரூபா வீதம் நிதியுதவியை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் (04) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து வழங்கி வைத்தார். உலக சாம்பியன்ஷிப் மல்யுத்தப் போட்டி ஸ்பெயினில் 17ஃ10ஃ2022 ஆம் திகதி முதல் 23ஃ10ஃ2022 திகதி வரை நடைபெறவுள்ளது.

# மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷனில் விஜயதசமியன்று வித்தியாரம்ப நிகழ்ச்சி







**(கல்லடி நிருபர்)**

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனில் விஜயதசமியை முன்னிட்டு நேற்று (05) திகதி ஏடு தொடக்கும் வித்தியாரம்ப நிகழ்வு இடம்பெற்றிருந்தது. ஏடு தொடக்கும் நிகழ்ச்சியானது மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனில் அமைந்துள்ள ஆலயத்தில் இடம்பெற்றிருந்தது. மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் சுவாமி தட்சயானந்தா ஜீ மஹராச் தலைமையில் இடம்பெற்ற விஜயதசமி நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் உதவி மேலாளர் சுவாமி நீலமானந்தா ஜீ மஹராச் அவர்களும் பங்குபற்றி சிறுவர்களுக்கு ஏடு தொடக்கியிருந்தார்.

# பள்ளிவாசல் சுற்றுப்பயணம் நிகழ்ச்சி



**ஹஸ்பர்**

இஸ்லாமியரின் பள்ளிவாசலை நேரடியாக சகோதர இன மக்கள் பார்வையிட்டு அங்கு நடைபெறும் விடயங்களை தெளிவுபடுத்தும் நோக்கிலான பள்ளிவாசல் சுற்றுப்பயணம் நிகழ்ச்சி நேற்று (05) திருகோணமலை அனுராதபுர சந்தி அல்/ஹலூர் ஜ/ம்மா பள்ளிவாசலில் நடைபெற்றது. பள்ளிவாசலில் மேற்கொள்ளப்படும் வழிபாட்டு விடயங்களை எடுத்துக்காட்டல்,இஸ்லாமிய நடைமுறைகள், ஆன்மீக விழுமியங்கள், இஸ்லாம் சமயம் குறித்தான தப்பபிப்பிராயங்களை தெளிவுபடுத்தல் போன்ற பல விடயங்களை உள்ளடக்கியதாக இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. சகோதர மக்களிடையே உள்ள உறவை வலுப்படுத்தும் நோக்கில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சர்வமத தலைவர்கள், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம, மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகள், மாணவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள்,பெண்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

# 10 தினங்களாக கடலுக்கு சென்ற மீனவர்கள் கரைக்கு திரும்பவில்லை

**பாறுக் ஷிஹான்**

கடந்த 10 தினங்களாக கடலுக்கு சென்ற மீனவர்கள் இதுவரை கரைக்கு திரும்பவில்லை என்பதுடன் அம்மீனவர்களின் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட கடற்பரப்பில் இருந்து கடந்த 26.09.2022 அன்று மாலை புறப்பட்டு சென்ற 4 மீனவர்கள் குறித்து இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மேற்குறித்த விடயத்தை சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி ரொஷான் அக்தர் எடுத்து செல்ல நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

மேற்குறித்த மீனவர்கள் காணாமல் சென்ற விடயத்தை சம்பந்தப்பட்ட தரப்பினரின் கவனத்திற்கு மீனவ சங்கத்தினர் கொண்டு வந்திருந்த போதிலும் தேடுதல் நடவடிக்கை மந்த கதியில் இடம்பெற்று வருவதாக காணாமல் போன படகு உரிமையாளரினால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே கடலுக்கு சென்று காணாமல் போன மீனவர்களின் குடும்பத்திற்கு தற்காலிகமாவது வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதற்கு ஏதாவது கொடுப்பனவையோ அல்லது



நஷ்டஈட்டையோ பெற்றுக்கொடுக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் எவரும் இதுவரை முன்வரவில்லை.எனினும் முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி ரொஷான் அக்தர் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

குறித்த விடயத்தை மனிதாபிமான நடவடிக்கையாக ஏற்றுக்கொண்டு குறித்த மீனவ குடும்பங்களிற்கு உதவ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வேண்டுகளோள் முன்வைக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தின் கல்முனை துறையில் இருந்து ஆழ்கடல்இயந்திரப்படகு ஒன்றில் மீன்பிடிக்கச் சென்ற 4 மீனவர்கள் 10 நாட்களாகியும் இதுவரை கரைதிரும்பவில்லை என்பதுடன் கடந்த திங்கட்கிழமை (26) குறித்த படகில் சென்ற நிலையில் எவ்வித தொடர்புகளும் இன்றி தாங்கள் உள்ளதாக அவர்களின் குடும்பத்தினர் கவலை தெரிவித்த நிலையில் உள்ளனர்.

இதில் கல்முனையை சேர்ந்த எம்.ஐ.எம் மஜிட் (வயது 55), சி.எஸ்.எச்.எம் நிப்றாஸ் (வயது 36 ) , ஏ.பி கபீர் (வயது 50) ,எம்.என். ஹில்மி (வயது 33),ஆகிய மீனவர்களே குறித்த படகில் பயணம் செய்து காணாமல் போய் உள்ளனர். இவர்கள் பற்றிய தகவல்களை பொலிஸ் கடற்படை உள்ளிட்ட தரப்பினருக்கு மீனவ சங்கம் அறிவித்துள்ளதுடன் மீனவ சங்கங்களும் தனியான தேடுதல் வேட்டையை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

“கல்விக்கு கைகொடுப்போம்”
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

# போக்குவரத்து சேவையின் சீர்கேடால் பலதரப்பட்ட பிரயாணிகள் பெரும் பாதிப்பு

**(வாஸ் கூஞ்ஞ)**

போக்குவரத்து சேவையின் சீர்கேடால் பலதரப்பட்ட பிரயாணிகள் பெரும் பாதிப்பகளுக்கு உள்ளாகி வருவதாக தெரிவிக்கின்றனர். மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள மரே.மஸ்கெலிய அரச பேருந்து சேவை கடந்த ஒரு வாரமாக இடம் பெறாமையாலேயே இவ் நிலை எற்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள பயணிகள் பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச ஊழியர்கள் மிகவும் சிறமத்துக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ் அரச பேரூந்து சேவை காலை 6.30 மரே தோட்ட தேயிலை தொழிற்சாலை அருகில் இருந்து ஆரம்பித்து பொரஸ் , முள்ளுகாமம் , நல்லதண்ணி , லக்சபான , ரிக்காடன் கிராமம் , மவுஸ்சாகல , கங்கேவத்த , புரவுன்லோ தோட்ட பிரதான வீதி வழியாக மஸ்கெலியா சென்றடையும். இதனால் முன் கூட்டியே அரச பேருந்துக்கு பணம் கட்டி பயண சீட்டு பெற்றவர்கள் மேலும் தனியார் பேருந்துகளுக்கு பணம் செலுத்தி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அவ்வாறு பணம் கொடுத்து சென்றாலும் குறிப்பிட்ட நேரத்தில் செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளது என புகார் தெரிவிக்கின்றனர். குறிப்பிட்ட அந்த நேரத்துக்கு செல்லும் பேருந்து சாரதி கடந்த ஒரு வாரமாக விடுமுறையில் உள்ளதாகவும் அதற்காக வேறு ஒரு சாரதியை கடமையில் ஈடுபடுத்த ஹட்டன் அரச பேருந்து நிலையத்தில் சாரதிகள் பற்றாக்குறை காரணமாக இச் சேவை தொடர முடியவில்லை என்றும் தெரியவருக்கின்றது.